**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.380/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | கஸ்தூரி |
| Father's Name/Husband Name: | மணி |
| Village : | தேவையூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 33/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 06.05.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி செல்லமுத்து ஆஜர் இல்லை. அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 பிரியாவை தெரியும். எனது அக்கா ஆவார். கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பு மாலை 4-4.30 மணியளவில் எனது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். அ.சா.1 பிரியா அவருடைய தோட்டத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தார். எங்கள் இருவர் தோட்டமும் அருகருகே உள்ளத. எதிரி செல்லமுத்து வயலுக்கு சென்றதை நான் பார்த்தேன். அ.சா.1 பிரியாவிடம் பிரச்சனை செய்ததை நான் நேரில் பார்க்கவில்லை. அ.சா.1 வீட்டிற்கு சென்றுவிட்டு எனக்கு போன் மூலம் எதிரி செல்லமுத்து என் கையை பிடித்து இழுத்து அசிங்கமாக பேசியதாக எனக்கு தகவல் சொன்னார்.

நான் அ.சா.1 பிரியா வீட்டிற்கு நேரடியாக சென்று என்ன நடந்தது என்று கேட்டேன். அ.சா.1 மாடு மேய்த்து கொண்டிருந்த போது அங்கிருந்த எதிரி அ.சா.1ன் கையை பிடித்து இழுத்ததாகவும் மேலும் ஓடைக்கு வருமாறு கூப்பிட்டதால் அ.சா.1 பயந்து கொண்டு கையை உதறிவிட்டு வீட்டிற்கு வந்ததாக சொன்னார். அதன்பிறகு நானும், ராமராஜ், செல்வகுமார் எதிரியின் வீட்டிற்கு சென்று அ.சா.1 பிரியாவின் காட்டிற்கு எதற்காக சென்றாய் அங்கு உனக்கு என்ன வேலை என்று கேட்டோம். அதற்கு எதிரி நான் பிரியாவின் காட்டிற்கு செல்லவில்லை என்று சொன்னார். நான் எதிரியிடம் நீங்கள் காட்டிற்கு செல்லும் பாதை வழி செல்வதை நான் பார்த்தேன் என்று சொன்ன பிறகு எதிரி பிரியாவின் காட்டிற்கு சென்றதை ஒப்புக் கொண்டார்.

பின்னர் எதிரி நான் அவ்வாறு தான் பிரியாவின் காட்டிற்கு செல்வேன் என்று சொல்லி வீட்டிற்குள் சென்று கத்தியை எடுத்துக்கொண்டு வந்து ராமராஜை குத்த வந்தார். எங்களை ஆபாசமாக திட்டினார். உங்களால் என்ன செய்யமுடியுமோ செய்து கொள்ளுங்கள் என்று சொன்னார். அதன் பிறகு பிரியாவை அழைத்துக் கொண்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். எதிரியைப் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். இன்று எதிரி நீதிமன்றத்தில் இல்லை. வழக்கு சம்மந்தமாக சம்பவம் இடம் வந்த போலிசார் முத்துலட்சுமி மற்றும் என் முன்னிலையில் சம்பவத்தை படம் வரைந்து எழுதி கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாம் கையெழுத்து என்னுடையது தான். **பார்வை மகஜரில் உள்ள முதலாம் கையெழுத்து அ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் நிலை சாட்சியத்தில் சொன்ன விவரங்களை தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் கையொப்பமிட்ட தாளில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் போலிசார் வாசித்து காண்பித்தார். எனது சொந்த ஊர் பெரம்பலூரில் உள்ள எளம்பலூர் சாலை என்றால் சரிதான். காட்டில் நடந்த விவரங்களை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது பிரியா சொல்லி தான் தெரியும் என்றால் ஆமாம் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நான் காட்டில் இருந்தேன் என்றால் சரிதான். பிரியா எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவர் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி கத்தியால் யாரையும் குத்த வரவில்லை என்றாலும் யாரையும் ஆபாசமாக பேசவில்லை என்றாலும் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.